**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Space of Women in "Isai Kurippugal Nirayum Maithanam"

**M. Ranjitha,** Ph.D Scholar, Tamil Department, Government Arts College, Udumalpet – 642126, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-8619-8860**
**DOI: 10.5281/zenodo.6622596**

## Abstract

*Of the living organisms in the world, the two species, male and female of human kind, are superior to all other species. It is questionable whether such superior human beings are seen together in the system of any other society. In human beings, male and female are equal is a question. A society stepped in patriarchal politics constructs the male's presence and exterior and sets out to express his existence as he wishes. As well as the presence and exit for the woman. But in patriarchal society, it is practiced that the existence and exit of the woman is structured by the male and the existence and exit of the woman according to the will of the men. The poems "Isai Kurippugal Nirayum Maithanam" highlight the oppression of women in this disproportionate society of this day. Women should express their place and rights as they wish. This study highlights the need for women's space outside of the emotional space, the family space, the social space, the work space, and the importance of liberation to become an individual.*

**Keywords:** Women, Space, Music, Showing, Poem.

## References

[1] Aranga mallika. *Pennin Velium Viruppum.* New Century Book House Pvt Ltd., Chennai, 2008.
[2] K. Panchangam. *Pen-Mozhi-Punaivu*. Kavya Pathippagam, `Bangalore, 1999.
[3] V. Geetha Grisdty Subathra. *Palina Bagupatum Samuga Adaiyalangalum*. Bharathi Puthagalayam, Chennai, 2009.
[4] A. Vennila. *Isai kurippugal Niraium Maithanam*. Agani Velietu, Ammaiyapattu, Vanthavasi, 2017.
[5] A. Vennila. *Neeril Alaium Mugam.* Agani Velietu, Ammaiyapattu, vanthavasi, 2017.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# ‘இசைக் குறிப்புகள் நிறையும் மைதானம்’ காட்டும் பெண்வெளி

**மு. ரஞ்சிதா,** முழுநேர முனைவர் பட்டஆய்வாளர், தமிழ்த்துறை,
அரசு கலைக்கல்லூரி, உடுமலைப்பேட்டை – 642126, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-8619-8860
DOI: 10.5281/zenodo.6622596

**ஆய்வுச்சுருக்கம்**

*உலகில் வாழும் உயிரிகளில் ஆண் பெண் என்ற இரு உயிரிகள் எல்லா உயிரிகளைக் காட்டிலும் மேன்மையுற்று முதன்மையாக விளங்குகின்றது.மேன்மையுற்ற அத்தகைய மனிதர்கள் சமூகம் என்ற அமைப்பில் ஒன்றாகப் பார்க்கப்படுகிறார்களா என்பது கேள்விக்குரியதாக அமைகின்றது. மனித சமூகத்தில் ஆண் பெண் என்ற சமமான மனித உயிரிகள் பாலின பேதத்தின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுடன் ஆணை ஒரு விதமாகவும், பெண்ணை ஒரு விதமாகவும் பிரித்துப்பார்க்கின்றது. ஆணாதிக்க அரசியலில் மூழ்கிப்போனச் சமூகம் ஆணுக்கான இருப்பையும், வெளியையும் ஆணே கட்டமைத்து அவன் விருப்பப்படி தனது இருப்பினை வெளிப்படுத்திக்கொள்வதாக அமைகின்றது. அதே போல் பெண்ணுக்கான இருப்பும், வெளியும் பெண்ணே தீர்மானிக்க வேண்டும். ஆனால் ஆணாதிக்க சமூகத்தில் பெண்ணிற்கான இருப்பையும், வெளியையும் ஆண் கட்டமைத்து ஆணிண் விருப்பப்படியே பெண்ணின் இருப்பும் வெளியும் அமைவதாக நடைமுறைப்படுத்தப் படுகிறது. இந்த ஏற்றத்தாழ்வு சமூகத்தில் பெண்ணை இன்றைய காலம் வரை ஒடுக்கமுறையிலேயே வைத்திருக்கின்றதை கவிஞர் வெண்ணிலாவின் ‘இசைக் குறிப்புகள் நிறையும் மைதானம்’ எனும் கவிதை நூல் எடுத்துரைக்கின்றது. பெண்கள் தங்களுக்கான இடத்தினை, உரிமையினை தங்களது விருப்பப்படியே வெளிப்படுத்த வேண்டும். பெண்களுக்கான வெளியானது உணர்வு வெளி, குடும்ப வெளி, சமூகவெளி, பணிசார்வெளி, போன்ற எல்லா இடங்களிலும் ஆண் கட்டமைப்பு அற்ற வெளியாக்க வேண்டும் என்பதையே இவ் ஆய்வு எடுத்தியம்புகிறது.*

**திறவுச்சொற்கள்:** பெண், இடவெளி, இசை, காட்டுதல், பாடல்.

**முன்னுரை**

மானுட சமூகத்தில் பெண்ணானவளின் வெளி ஆணின் வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் முடங்கிக்கிடக்கின்றது. உலகில் மனிதம் என்ற பண்பாட்டுத் தளத்தில் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்தாலும், சமூகம் ஆண் பெண் என்ற பாலின வேறுபாட்டின் அடிப்படையிலேயே இன்றளவும் இயங்கி வருகின்றது. இது சமூகத்தின் பிற்போக்குத் தனத்தினை வெளிப்படுத்துகின்றது. சமூகத்தில் பெண் தனக்கான இடம், உரிமை, உணர்வு, சுதந்திரம், விருப்பம் போன்ற வெளியினைப் பிறரின் கட்டுப்பாட்டிற்கு உட்படாமல் தானே வரையறை செய்பவளாக இருத்தலே பெண்வெளியாகும். ஆணிற்கான இருப்பையும், வெளியையும் ஆண் தீர்மானிப்பது போல், பெண்ணிற்கான இருப்பையும், வெளியையும் பெண் தீர்மானிக்க வேண்டும். பெண்ணிற்கான வெளியினை குடும்பத்தில், பணிசார் சூழலில், சமூகத்தில் என எல்லா நிலைகளிலும் வெண்ணிலாவின் ‘இசைக்குறிப்புகள் நிறையும் மைதானம்’ எனும் கவிதை நூல் வெளிப்படுத்தும் பாங்கினை எடுத்துரைப்பதாக இவ் ஆய்வு அமைகிறது.

**பெண்வெளி**

சமூகத்தில் நிகழ்கின்ற ஒவ்வொரு செயல்பாடுகளிலும் பெண் மறுதலிக்கப்படுகிறாள். பெண் மறுதலிக்கப்படுகின்ற இடங்களில் அவளுக்கான இருப்பினை அவளின் விருப்பப்படி செயல்படுத்திக்கொள்கின்ற நிலைப்பாடு பெண்வெளி ஆகும். பெண்வெளி பெண்ணியத்தின் வளர்ச்சிக்கு இன்றிமையாத ஒன்றாக அமைகின்றது. பெண்கள் தங்களது இருப்பினைக் குறித்து அறிந்துகொள்ளாதவற்றை அறிந்துகொள்ளச் செய்வது பெண்வெளியின் நோக்கமாகின்றது.

> **கூரையின் ஓட்டை வழியே ஒளி ஊடுருவி, வீட்டின் இருளை அகற்றுவதைப் போலப் பெண்ணின் விளிம்புநிலை இருள் சூழ்ந்த வாழ்க்கையை வெளிச்சத்திற்குக் கொண்டுவரப் பெண்ணியம் அவசியமாகிறது. (அரங்கமல்லிகா, பெண்ணின் வெளியும் இருப்பும், ப.12)**

என்ற கருத்தானது பெண்கள் தங்களது இருப்பினை அறிந்துகொள்ள பெண்வெளி அவசியமாகின்றது என்பதையும் பெண்வெளியின் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துகிறது.

> **என்ன இந்தப் பெண் ஜென்மம்; நினைத்ததை வாய்விட்டுச் சொல்ல முடியாத ஜென்மம்; எதைச் செய்ய வேண்டும்; எதை நினைக்க வேண்டும் என்றெல்லாம் கூட ஆண்களால் தீர்மானித்து விடப்பட்ட ஜென்மம். (க. பஞ்சாங்கம், பெண்-மொழி- புனைவு, ப.146)**

என்று பெண்களால் தீர்மானிக்கப்படாத பெண்வெளியைக் குறித்த கருத்தினை பிரபஞ்சன் தம் நூலில் பதிவுசெய்துள்ளார். பெண்வெளியானது அவள் உணர்வு சார்ந்த அக நிலைகளில் அகவெளி என்றும், உரிமை, இடம், சுதந்திரம், விருப்பம் சார்ந்த புறநிலைகளில் புறவெளி என்றும் பகுக்கலாம். அவை

- **அகவெளி**

  **1. உணர்வுவெளி**

பெண்ணின் அகம் சார்ந்த உணர்வு நிலைகளில் பெண்ணிற்கான இடம் மறுக்கப்படுதலை வெளிப்படுத்தி பெண்ணின் இருப்பினை புலப்படுத்துவது உணர்வுவெளியாகும்.

- **புறவெளி**

  **1. குடும்பவெளி**

  **2. சமூகவெளி**

  **3. பணிசார்வெளி**

பெண்ணின் புறநிலை சார்ந்து செயல்படும் நிலைகளில் அவளுக்கான இடம் மறுக்கப்படுதலை வெளிப்படுத்தி பெண்வெளியினை எடுத்துரைப்பதாக புறவெளி அமையப்பெறுகின்றது.

**பெண் அகவெளி**

பெண்ணின் அகம் சார்ந்து நிகழ்கின்ற துன்பம், மகிழ்ச்சி, இரக்கம், பயம், காதல், காமம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்துவது பெண் அகவெளியாகக் கருதப்படுகிறது.

**1.உணர்வுவெளி**

ஆண் பெண் உறவு நிலையில் பெண்ணின் உடல் ரீதியான காம உணர்வுகள் ஆண்களால் மதிக்கப்படாமல் மறுக்கப்படுகின்றன. தன் தேவைக்காகப் பெண்ணை நுகர்ந்து கொள்கின்ற ஆண், பெண்ணினது தேவைக்காக ஆணைத்தேடி வருகின்றபொழுது அவளது காம உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல் புறக்கணிக்கின்றான். பெண் ஆணினிடத்து எதிர்பார்க்கின்ற சிறு முத்தங்களும், கை கோர்த்தல்களும் கூட நிகழாமல் அன்பிற்காக ஏங்கும் பெண் உணர்வு நிலையினை கவிஞர் வெண்ணிலா

> **கற்பிதங்களற்ற / முத்தங்கள் வேண்டி**

**உலர்கின்றன உதடுகள் /கால் விரல்களுடன்**
**கோர்த்துக்கொள்ளும் / கை விரல்கள் இன்றி**
**துவண்டு சரிகின்றன கால்கள் / தீப்பற்றி எரியச் செய்யும்**
**பார்வைக் கணைகள் / உடல் முழுக்க காயங்களாக (அ.வெண்ணிலா, ப.54)**

என்னும் வரிகளின் வழி உணர்த்துகின்றார். இவ்வரிகள் பெண்ணின் உடல் சார்ந்த உணர்வுகள் அவளது விருப்பம் சார்ந்து நிகழ்வதில்லை என்பதையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆணாதிக்கச் சமூக அரசியல் தான் இதற்குக் காரணமாக அமைகின்றது என்பதையும் மறுக்கவியலாது. ஆண் தன் காம உணர்வினை வெளிப்படுத்தும் போது ஏற்றுக்கொள்ளும் சமூகம், அதே வேளை பெண் வெளிப்படுத்தும் போது அதனை மிக இழி செயலானதாக ஆணாதிக்கச் சமூகம் கட்டமைத்துள்ளது. இந்த ஆணாதிக்கக் கட்டமைப்பினை உடைத்து பெண் தனக்கான வெளியினை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

**பெண்களின் அக உணர்வுகள் ஆண்களின் மொழி வெளிப்பட்டதைப் போல, அவர்களால் உருவாக்கப்பட்ட எல்லைக்கு வெளியே நின்று பெண்கள் தங்கள் உணர்வுகளைப் பதிவு செய்து விமரிசனத்திற்குட்படுகிறது. (அரங்கமல்லிகா, பெண்ணின் வெளியும் இருப்பும். ப.14)**

எனும் அரங்கமல்லிகாவின் கருத்து பெண்ணின் அக வெளியினைக் குறித்து எடுத்தியம்புகிறது.

**பெண் புறவெளி**

மனஉணர்வுகளைத் தவிர்த்து சமூகம், குடும்பம், பணி சார் நிகழ்வு, இலக்கியம் போன்ற இடங்களில் புறம் சார்ந்து பெண் செயலாற்றுவதன் மூலமாக தனது இருப்பினை வெளிப்படுத்துகின்ற நிலைப்பாட்டை பெண் புறவெளி எனக் கருதலாம்.

**1. குடும்ப வெளி**

பெண்ணின் குடும்ப வெளியானது பெண்ணை பரந்துபட்ட சமூகத்தில் அடியெடுத்து வைக்கவிடாமல் கூண்டுப்பவையாக அடைத்து வைப்பதாகவே உள்ளது.

**சிடுக்குப் பிடித்த / சமையலறை மேடையும்**
**கனத்த கறையேறிய / கழிப்பறைச் சுவரும்**
**கடக்கும் / விநாடிகளுக்கிடைப்பட்ட வாய்ப்பில்**
**நூலாம்படை கோர்க்கும் சிலந்தியும் / பீதியடையச் செய்கின்றன**
**பெண்ணை; / கழுவப்படாத**
**எச்சிற் தட்டுகளுக்கிடையில் / மீதப்பட்ட உணவுப்பொருளாய்**
**கரைந்தோடுகிறாள் / பெண் (அ.வெண்ணிலா, இசைக் குறிப்புகள் நிறையும் மைதானம், ப.10)**

என்னும் வரிகள் ஒவ்வொரு மணமான பெண்ணும் குடும்பவெளி என்ற பரப்பில் ஆணையும், ஆண் சார்ந்த குடும்பத்தாரையும், அவர்களின் குடும்பத் தேவைகளைப்பூர்த்தி செய்யும் உயிரியாகவே பெண் விளங்குகிறாள் என்பதை எடுத்துக்காட்டி நிற்கின்றன. குடும்பங்களில் ஆணைப் போன்று பெண்ணும் ஒரு நபராக இருப்பினும் ஆணிற்குக் கொடுக்கப்படுகின்ற சுதந்திரமும், முக்கியத்துவமும் பெண்ணிற்குக் கொடுக்கப்படுவதில்லை. இந்நிலையினைக் கொண்டு குடும்பத்தில் பெண்ணின் வெளி புறக்கணிக்கப்படுவதை அறிந்துகொள்ள முடிகிறது.

**2. சமூகவெளி**

சமூக பண்பாட்டு வெளியில் ஆண் பெண் இருபாலினமும் ஒன்றெனக் கூறப்படுகிறது. ஆனால் இது நடைமுறைச் செயலில் சாத்தியமற்றதாக அமைகின்றது. தங்களுக்கான வெளியினை

அறிந்துகொள்ளாமையினால் சமூகத்தில் பெண்கள் இன்றளவும் ஆண்களுக்குக் கீழானவர்களாக நடத்தப்படுகின்றனர். இதிலிருந்து பெண்கள் விடுபட்டு வாழ தங்களுக்கான சுதந்திர வெளியைப் பெண்களே உருவாக்க வேண்டும். இயற்கையில் ஆண் பெண்ணுக்குள்ள வேறுபாடுகளைத் தவிர பிற செயற்கை வேறுபாடுகளையும் ஆணாதிக்கச் சமூகம் உருவாக்கியுள்ளது. அவற்றை சமூகத்தில் புகுத்தி அதன் வழி பெண்ணைப் புதுப்புது வரைமுறைகளின் படி வாழச் செய்துள்ளது. ஆணிற்கென்ற தனி விதிமுறையையும், பெண்ணிற்கென்ற தனி விதிமுறையையும் ஆணாதிக்கச் சமூகம் கட்டமைத்துள்ளது. ஆணாதிக்க அரசியலினைக் கட்டுடைத்து சமூகத்தில் பெண்ணின் வெளியினைப் பெண்கள் அறிந்து கொள்வது அத்தியாவசியமாகிறது. பெண்களைக் குறுகிய கட்டமைப்புக்குள் அடக்கி ஒரு சிறு ‘‘அறை’’யாகவும், ஆண்களை சிறிய அறையை விடப் பெரிய பரப்பினைக் கொண்ட ‘‘வீதி’’யாகவும் ஆணாதிக்கச் சமூகம் கட்டமைத்துள்ளதை

**அறை / உள்ளிரு**

**தனித்திரு / கால்களால் தேய்**

**சுத்தம் செய் / அதிர்ந்து நடக்காதே. (மேலது, ப.56)**

என்று கவிஞர் வெண்ணிலா வெளிப்படுத்துகின்றார். இதற்கு ஒத்த கருத்தினை அரங்கமல்லிகாவும் ‘பெண் அஞ்சி அடங்கி வாழ வேண்டியவள். அதிர்ந்து நடக்கக்கூடாது. உரத்தக்குரலில் பேசக்கூடாது. ஆணிடம் நேருக்குநேர் நின்று பேசக்கூடாது. உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளக் கூடாது. இல்லறத்தை இனிதே காக்க வேண்டும்’ என்று கூறியுள்ளார். பெண்ணானவள் ஆணைக்காட்டிலும் மதிப்பு குறைந்தவளாகவும், குறுகிய கட்டமைப்புக்குள் வாழ வேண்டியவளாகவும் ஆணாதிக்க அரசியல் சமூகத்தில் செய்துள்ளதை கவிஞர் வெண்ணிலா தம் கவிதைகளில் எடுத்துரைக்கின்றார்.

**பணிசார்வெளி**

ஆண்வெளி பணிசார் சூழலிலும் பெண்வெளியை விட பரந்துபட்ட வெளியினைக் கொண்டதாகவே அமையப்பெற்றுள்ளது. பெண்கள் பணிபுரிகின்ற இடங்களில் ஆண்கள் செய்யக்கூடிய அதே வேலையைச் செய்தாலும் ஆணைக் காட்டிலும் குறைந்த ஊதியமே கொடுக்கப்படுகிறது.

**பெண்களுக்கு வழங்கப்படும் ஊதியமானது அவர்கள் உழைப்புக்கு ஏற்றதாக இருப்பதிற்குப் பதிலாக குடும்பத்திற்குத் தேவையான ‘உபரி’ ஊதியமாகக் கருதப்படுகிறது. இதனால் தான் அவர்களுக்கு எல்லாத் துறைகளிலும் குறைவான ஊதியம் வழங்கப்படுகிறது. (வி.கீதா கிறிஸ்டி சுபத்ரா, பாலின பாகுபாடும் சமூக அடையாளங்களும், ப.63)**

என்ற கருத்து பணிசார்வெளியிலும் பெண்வெளியானது ஒடுக்கப்படுவதை காணமுடிகிறது.

பெண்ணினது உடல் ரீதியான, உணர்வு ரீதியான மாற்ற நிகழ்வுகளைப் புரிந்துகொள்ளாமல் அவளைப் புறந்தள்ளுவதும் பணிசார் வெளியில் நடைபெறுகின்றது. குழந்தைக்காக உழைக்கின்ற குழந்தைப் பெற்ற பெண்ணின் நிலையினைக் கவிஞர் வெண்ணிலா,

**அவசரமாய் / அலுவலகக் கழிப்பறையில்**

**பீச்சி விடப்படும் பாலில் தெரிக்கிறது / பசியைத் தின்று அலறும்**

**குழந்தையின் அழுகுரல். (அ.வெண்ணிலா, நீரில் அலையும் முகம், ப.45)**

என்ற வரிகளின் மூலம் உணர்த்துகிறார். குழந்தைக்குப் பால் கொடுக்கக்கூடிய தாய் அக்குழந்தையை விட்டுவிட்டு பணிக்கு வருதலில் பெண்ணின் வெளியானது இக்கட்டான சூழ்நிலையைக் கொண்டுள்ளது என்பதையும் அறியமுடிகிறது.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

**முடிவுரை**

காலங்காலமாக ஆணாதிக்கச் சமூகம் பெண்ணை அவளது உடலின் மூலமாகவும், பாலின வேறுபாட்டின் மூலமாகவும் ஒடுக்கிக்கொண்டே வருகின்றது. இதன் மூலமாக அவளுக்கான வெளி இல்லாமலாக்கப் படுகிறது. ஆணாதிக்கச் சமூத்தின் ஒடுக்கமுறையால் பெண் சமூகத்தில் குடும்பம், பணிசார் சூழல் என பல்வேறான இடங்களில் பெண்ணின் வெளியினை பெண்ணே திர்மானிக்க முடியாதவாறு கட்டமைத்துள்ளதை அறியமுடிகிறது. வீடு, குடும்பம் என்ற குறுகிய கட்டமைப்பை விட்டு பெண் வெளியில் வந்தால் அவளை காமப்பார்வையுடனும், காட்சிப்பொருளாகவும் பார்க்கின்ற ஆணாதிக்கப் போக்கினை புலப்படுத்துகிறது. பெண்ணின் வெளி அகவெளி, புறவெளி எனப் பிரிக்கப்புடுகின்றது. உணர்வு சார்ந்த நிலையில் பெண்ணிற்கான இடம் மறுக்கப்படுவது அகவெளி என்றும் உரிமை, விருப்பம், சுதந்திரம், இருப்பு போன்ற செயல்களில் பெண்ணிற்கான இடம் மறுக்கப்படுவது புறவெளி என்றும் குறிப்பிடப்படுகிறது. பெண்ணின் உடல் சார்ந்த, காமம் சார்ந்த நிலைகளில்பெண்மன உணர்வுகள் மறுதலிக்கப்படுகின்றது.ஆணாதிக்கச் சமூகம் பெண்ணை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் உட்புகுத்தி ஆணுக்கு கீழானவளாவே கட்டமைத்துள்ளது. ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்ணிற்கான வரையறையைக் கட்டுடைத்து பெண் தனக்கான வெளியை உருவாக்க வேண்டும் என்பதை கவிஞர் வெண்ணிலாவின் இசைக்குறிப்புகள் நிறையும் மைதானம் எனும் கவிதை நூல் வழி அறியமுடிகிறது. பணிக்குச்செல்லுதல் என்று பெண்ணின் வளர்ச்சி நிலைகளில் ஒன்றெனக் கருதினாலும் பணி புரியும் இடங்களில் பெண்ணுக்கு மறுக்கப்படுகின்ற வெளியினையும், அங்கு நிகழ்கின்ற பெண் மீதான அடக்கமுறை உணரமுடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1] அரங்கமல்லிகா. *பெண்ணின் வெளியும் இருப்பும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 2008.

[2] க. பஞ்சாங்கம். *பெண்-மொழி- புனைவு*. காவ்யா பதிப்பகம், பெங்களூர், 1999.

[3] வி.கீதா கிறிஸ்டி சுபத்ரா. *பாலின பாகுபாடும் சமூக அடையாளங்களும்*. பாரதி புத்தகாலயம், சென்னை, 2009.

[4] அ.வெண்ணிலா. *இசைக் குறிப்புகள் நிறையும் மைதானம்*. அகநி வெளியீடு, அம்மையப்பட்டு, வந்தவாசி, 2017.

[5] அ.வெண்ணிலா. *நீரில் அலையும் முகம்*. அகநி வெளியீடு, அம்மையப்பட்டு, வந்தவாசி, 2001.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.